முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2021 யூலை

## (203) வணிகச் சட்டம்

(Business Law)

2021-10-23
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 08
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.6*** *வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** அரசியலமைப்பை பொருள்கோடல் (interpret) செய்வதற்கான நியாயாதிக்கத்தை பின்வருவனவற்றுள் எந்த நீதிமன்றம் கொண்டிருக்கிறது?

(1) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(2) நீதிவான் நீதிமன்றம்
(3) மேல் (high) நீதிமன்றம்
(4) உயர் (supreme) நீதிமன்றம்

**1.2** பின்வருவனவற்றுள் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் ஒரு கூறு (component) **அல்லாதது** எது?

(1) குடியுரிமை பற்றிய ஏற்பாடு
(2) நீதிச் சேவை ஆணைக்குழு
(3) முதலீட்டுச் சபையின் தொழிற்பாடுகள்
(4) அடிப்படை உரிமைகள்

**1.3** பின்வருவனவற்றுள் பொருள்கள் விற்பனை ஒப்பந்தத்தின் கீழான ஓர் உட்கிடை நிபந்தனையாக (implied condition) **அமையாதது** எது?

(1) பொருள்கள் ஒரு விவரணத்தின்படி விற்பனை செய்யப்படும்போது, அந்தப் பொருள்கள் அவ்விவரணத்தின்படி இருத்தல் வேண்டும்.

(2) வழங்கப்பட்ட பொருள்கள் உரிய நோக்கத்திற்குப் பொருந்துதல் வேண்டும்.

(3) பொருள்கள் விற்பனைக்கு உகந்த தரத்தில் இருத்தல் வேண்டும்.

(4) பொருள்களை வாங்குபவர் எந்தவொரு இடையூறும் இன்றி, அந்தப் பொருள்களின் முழு உடமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**1.4** கீழ்வரும் குற்றங்களைக் கவனத்தில் கொள்க :

**(a)** பொருள்களை விற்பனை செய்ய மறுத்தல்

**(b)** பொருள்களை உடமையில் வைத்திருக்க மறுத்தல்

**(c)** சட்டவிரோதமான பணத்தை சட்டரீதியான நிதிக் கருவிகளில் முதலீடு செய்தல்

மேலுள்ளவற்றுள், 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் பிரதான குற்றங்களாக இருப்பவை :

(1) **(a)** யும் **(c)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேற்கூறிய அனைத்தும்.

**1.5** பின்வருவனவற்றுள் வலிதான மாற்றுண்டியல் (Bill of Exchange) ஒன்றின் ஓர் அம்சம் **அல்லாதது** எது?

(1) இது நிபந்தனையற்ற கட்டளைகளைத் (unconditional orders) தாங்கிக்கொள்ள வேண்டும்.

(2) இது எழுத்துபூர்வமானதாக இருத்தல் வேண்டும்.

(3) இது நீடித்திருக்கத்தக்க மை கொண்டு அச்சிடப்பட்ட வடிவில் இருத்தல் வேண்டும்.

(4) இது அதை வழங்குபவரால் கையொப்பமிடப்பட வேண்டும்.

**1.6** கைமாற்றத்தகு சாதனங்கள் தொடர்பான சட்டத்தின் கீழ் காலக்கிரமத்தில் வைத்திருப்பவர் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க :

**(a)** உண்டியலுக்கான பெறுமதியைப் பெறுவதற்கு முன்னுரிமை பெறுவார்.

**(b)** உண்டியல் மீதான உரிமைகளை மீட்டெடுக்க முன்னைய திறத்தவர்கள் அனைவருக்கு எதிராகவும் வழக்குத் தொடுக்க முடியாது.

**(c)** கைமாற்றத்தின் மூலம் அவரது உரித்தினை மாற்ற முடியும்.

மேலுள்ளவற்றுள், சரியான கூற்றுக்கள் :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம் (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேலுள்ள அனைத்தும்.

(02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)

*இல. **1.7** தொடக்கம் **1.9** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.7** அவசியத்தன்மைக்கேற்ப ஒரு முகவராண்மை உருவாக்கப்படும்போது, முகவரின் செயற்பாடுகளுக்கு முதல்வர் பொறுப்புடையவர் அல்ல.

**1.8** CIF உடன்படிக்கை ஒன்றில், ஒப்பந்தம் தொடர்பான விற்பனையாளரின் கடப்பாடானது சரக்கு கப்பல் தளத்திற்கு ஏற்றப்பட்டவுடன் முடிவடைகிறது.

**1.9** ஏல விற்பனை ஒன்றில், விற்பனை பூர்த்தியடைந்ததும், ஏலதாரர் பொருளின் உரிமையாளராக இல்லாதபோதும் பொருளை வாங்குபவர் ஒரு சிறந்த உரித்தினை கையகப்படுத்துகிறார்.

(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

*இல. **1.10** தொடக்கம் **1.14** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உங்களுடைய விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதவும்.*

**1.10** இலங்கையிலுள்ள இரண்டு (02) ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களைக் குறிப்பிடுக.

**1.11** பொருள்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றின் இரண்டு (02) மூலகங்களைக் (elements) குறிப்பிடுக.

**1.12** நிதி நுண்ணறிவு அலகின் (Financial Intelligence Unit) இரண்டு (02) நோக்கங்களைக் குறிப்பிடுக.

**1.13** 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 05 இன் கீழ், "தகவலுக்கான அணுகுதலை மறுக்கக்கூடிய" இரண்டு (02) சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

**1.14** காசோலை ஒன்றைக் குறுக்குக் கோடிடுதல் தொடர்பில் "காசோலை வரையுநர் (Drawer)" ஒருவருக்குள்ள அதிகாரங்கள் (powers) இரண்டினைக் (02) குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(புள்ளிகள் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் உருவாக்கிய சுற்றுச்சூழல் அபாயத்தைத் தொடர்ந்து, இலங்கையிலுள்ள வீடுகளில் பயன்படுத்தப்படும் "வெள்ளை உப்புக்கான" கேள்வி எதிர்பாரா வகையில் அதிகரித்திருந்தது. **சரத்** 2018 ஆம் ஆண்டு முதல் **வரையறுக்கப்பட்ட வெள்ளை உப்பு (தனியார்) கம்பனியின்** முகவர் ஒருவராக இருக்கிறார். வெள்ளை உப்புப் பக்கெற் ஒன்றின் உயர்ந்தபட்ச சில்லறை விலை ரூபா 50/- ஆகும். வெள்ளை உப்பு நிறைந்துள்ள நான்கு களஞ்சியசாலைகள் மீதான கட்டுப்பாட்டை **சரத்** கொண்டிருக்கிறார். **சரத்** வெள்ளை உப்புக்கு சந்தையில் நிலவுகின்ற கேள்வியைப் பூர்த்தி செய்ய விரும்பியதுடன் சந்தைக்குத் தேவையான வழமையான வழங்கலையும்விட தனக்கு அதிகமான உப்பைப் பெற்றுக் கொள்வதற்காக களஞ்சிய முகாமையாளர் ஒருவருடன் மறைமுகமாக பேரம்பேசுவதில் ஈடுபட்டிருந்தார். பின்னர், **சரத்** தங்களது உப்பினை பக்கெற் ஒன்று ரூபா 100/- விலையில் விற்பனை செய்து, அதன் மூலம் ரூபா 5 மில்லியன் மேலதிக இலாபத்தை ஈட்டியிருந்ததை **வரையறுக்கப்பட்ட வெள்ளை உப்பு (தனியார்) கம்பனி** அறிந்து கொண்டது. அதே சமயம், இலங்கை நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை, வெள்ளை உப்பை அதிக விலையில் விற்பனை செய்த **சரத்தின்** நடவடிக்கை காரணமாக **வரையறுக்கப்பட்ட வெள்ளை உப்பு (தனியார்) கம்பனிக்கு** எதிராக விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) ***சரத்திற்கு*** எதிராக ***வரையறுக்கப்பட்ட வெள்ளை உப்பு (தனியார்) கம்பனியின்*** சட்ட ரீதியான உரிமைகளை ***ஆராய்க.*** (06 புள்ளிகள்)

(b) குறித்த சில்லறை விலையைவிட அதிகமான விலையில் உப்புப் பக்கெற்றுகளை விற்பனை செய்ததற்கு ***வரையறுக்கப்பட்ட வெள்ளை உப்பு (தனியார்) கம்பனி*** பொறுப்பாளியாக முடியுமா என்பதை ***விபரிக்குக.*** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

***ராஜா*** என்பவர் 2010 ஆம் ஆண்டு ***ஸ்டார் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து*** தனக்கான ஆயுள் காப்புறுதி ஒன்றினைப் பெற்றிருந்தார். அதில் தனது பின்னுரித்தாளிகளாக (beneficiaries) அவரது மனைவி ***சீதா*** மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளான ***ரீனா*** மற்றும் ***மீனா*** ஆகியோரைப் பெயரிட்டிருந்தார். அவர் வழமையாக எவ்வித தாமதமுமின்ற உரிய நேரத்திலேயே அவரது ஆயுள் காப்புறுதிக்கான தவணைப் பணங்களைச் செலுத்தியுள்ளார். 2021 மே மாதத்தில், ***ராஜா*** கோவிட் 19 தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார். அவரது திடீர் மரணத்தின் பின்னர், ***சீதா***வும் அவரது இரண்டு பிள்ளைகளும் பலதரப்பட்ட பணக் கஸ்டங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர். ***சீதா*** தனது கணவனின் ஆயுள் காப்புறுதியிலிருந்து இழப்பீடு கோரி (claim) ***ஸ்டார் காப்புறுதிக் கம்பனியைத்*** தொடர்பு கொண்டார். ஆயினும், ***ராஜாவால்*** பெறப்பட்ட ஆயுள் காப்புறுதியின் கீழ், கோவிட் 19 காரணமாக ஏற்படும் உயிரிழப்பு உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவித்து, ***ஸ்டார் காப்புறுதிக் கம்பனியால் சீதா***வின் இழப்பீட்டுக் கோரிக்கை தொடர்பான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) மேலுள்ள விவரணத்திற்கு “காப்புறுதியின் நெருக்கமான காரணம் (Proximate Cause in Insurance)” என்ற கோட்பாட்டின் பொருத்தத்தன்மை பற்றி ***ஆராய்க.*** (06 புள்ளிகள்)

(b) ***ராஜாவுக்கான*** ஆயுள் காப்புறுதி ***சீதாவால்*** பெறப்பட்டிருந்து, ***ராஜாவின்*** உயிரிழப்பு கார் விபத்தொன்றின் காரணமாக ஏற்பட்டிருப்பின், காப்புறுத்தத்தக்க நாட்டம் (insurable interest) என்ற கோட்பாட்டின் பொருத்தத்தன்மை பற்றி ***விபரிக்குக.*** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**ABC PLC** என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். **ABC PLC** இன் அமைப்பக (Articles of the Association) விதிகளின்படி, **ABC PLC** இன் பிரதான நோக்கமானது பயிர் செய்தல், நடவு செய்தல், பயிர்களை அறுவடை செய்தல், களஞ்சியப்படுத்தல் போன்ற விவசாயம் சார்ந்த வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகும். மேலும், கம்பனியின் அங்கத்தவர்களுக்கும் கம்பனிக்குமிடையில் ஏதாவது முரண்பாடுகள் (பிணக்குகள்) எழுமிடத்து அவை நடுவர் தீர்ப்பாயம் (Arbitration) ஒன்றினால் தீர்க்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட சரத்து ஒன்றினை **ABC PLC** இன் அமைப்பக விதிகள் உள்ளடக்கியுள்ளன.

எவ்வாறாயினும், கோவிட் 19 நோய்த் தொற்றுப் பரவல் காரணமாக, **ABC PLC** இன் பணிப்பாளர்களில் ஒருவரான ***ராஜமோகன்*** ஒவ்வொன்றும் 150,000 அமெரிக்க டொலர் பெறுமதியில், முழுமையான வசதிகளைக் கொண்ட மூன்று நோயாளர் காவுவண்டிகளை குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு பரிந்துரைத்துள்ளார். அத்துடன் இந்த வண்டிகளை தனியார் வைத்தியசாலை ஒன்றிற்கு வாடகைக்கு விட்டு, அதிலிருந்து வாடகை வருமானத்தை ஈட்டுவதற்கும் அவர் பரிந்துரைத்திருந்தார். **ABC PLC** இன் ஒரு பிரதான பங்குதாரரான ***சாகீர்*** என்பவர் இந்தப் பரிந்துரை தொடர்பில் ***கம்பனியுடன்*** முரண்பட்டிருந்ததுடன் நீதிமன்றத்தையும் நாடியிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மேற்படி விவரணத்திற்கு **ABC PLC** இன் அமைப்பக விதிகளின் செல்லுபடித்தன்மை (validity) பற்றி **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(b) கம்பனி ஒன்றின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படத் **தகுதியற்ற** மூன்று (03) நபர்களைக் (persons) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**மருத்துவர் ஜீவக** என்பவர் நகரில் நன்கு புகழ்பெற்ற மருத்துவப் பயிற்சியாளர் ஒருவராவார். அவர் பிற்பகல் வேளைகளில் **சத சுவ வைத்தியசாலை**யில் நோயாளர்களைப் பரிசோதிக்கிறார்.

**சத சுவ வைத்தியசாலையில்** அவரது ஊழியம் (தொழில்) தொடர்பான இரண்டு (2) தெரிவுகள் (options) கீழே தரப்பட்டுள்ளன :

<u>1 ஆவது தெரிவு</u> :

நோயாளர் ஒருவரைப் பரிசோதிப்பதற்காக ரூபா 2,000/- அறவிடுதல். இதில் 50% இனை **மருத்துவர் ஜீவகவுக்கு** வழங்குவதுடன் மீதியை வைத்தியசாலைக் கட்டணமாகப் பெற்றுக் கொள்ளுதல்.

<u>2 ஆவது தெரிவு</u>:

**மருத்துவர் ஜீவகவுக்கு சத சுவ வைத்தியசாலையால்** ரூபா 200,000/- நிலையான மாதாந்தச் சம்பளம் செலுத்துதல்

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மேலுள்ள தெரிவுகள் ஒவ்வொன்றின் கீழும் **மருத்துவர் ஜீவக சத சுவ வைத்தியசாலையின்** ஒரு ஊழியராக இருக்கிறாரா என்பதை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(b) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் (EPF) சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படாத நான்கு (04) வகையான ஊழியர்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(a) சர்வதேச வர்த்தகத்தில், பொருட்களுக்கான கொடுப்பனவைச் செலுத்துவதற்கு பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. சர்வதேச வர்த்தகத்தில் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் தொடர்பில் இறக்குமதியாளர்களினதும் ஏற்றுமதியாளர்களினதும் எதிர்பார்ப்புகள் முரண்பாடானவையாக இருக்கின்றன. கொள்வனவாளர் கொடுக்கல் வாங்கல் செயன்முறையில் சாத்தியமானளவு தாமதமாக கொடுப்பனவு செய்வதை விரும்புகின்ற அதே வேளை விற்பனையாளர் விரைவானதும் பாதுகாப்பானதுமான செயன்முறையொன்றை எதிர்பார்க்கிறார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் ஒரு கொடுப்பனவு முறையான நாணயக் கடிதத்தின் (Letter of Credit) வகிபாகத்தை (role) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) புலமைச் சொத்து என்பது மனிதனுடைய புலமையின் ஒரு அருவமான (கண்ணுக்குப் புலப்படாத) உருவாக்கம் ஆகும். இது எந்தவொரு நாட்டினதும் பொருளாதார, சமூக மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு பாரியளவில் பங்களிப்புச் செய்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க அருவச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ், உள்ளடக்கப்பட்டுள்ள ஐந்து (05) அருவச் சொத்துக்களைப் **பட்டியலிடுக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 07

(A) **தீனா** மற்றும் **டோனி** ஆகியோர் இலங்கையின் மேல் மாகாணத்தில் அமைந்துள்ள **வரையறுக்கப்பட்ட ஹெல்தி லைவ் வைத்தியசாலையின்** வழங்குநர்கள் ஆவர். 2020 ஏப்ரல் 01 ஆந் திகதியில் ஆரம்பித்து நான்கு வருட காலப்பகுதிக்கு புத்துணர்ச்சியான மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்காக இந்த வைத்தியசாலை 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் **தீனா**வுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது.

**தீனாவுடனான** உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தப் பெறுமதியின் 50% கொடுப்பனவை, முன்கூட்டியே முற்பணக் கொடுப்பனவொன்றாக **தீனாவுக்கு** வைத்தியசாலை செலுத்தியிருந்தது.

அதே நாள், 2020 ஏப்ரல் 01 ஆந் திகதியில் ஆரம்பித்து நான்கு வருட காலப்பகுதிக்குத் தேவையான தூய்மைப்படுத்தல் திரவத்தைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றை மற்றைய ஒப்பந்தகாரரான **டோனியுடன்** இந்த வைத்தியசாலை செய்து கொண்டது. எவ்வாறாயினும், **டோனிக்கு** எவ்வித முற்பணமும் செலுத்தப்படவில்லை.

இந்தப் பொருள்களை இரண்டு வார காலப்பகுதிக்கு ஒருமுறை வழங்குவதற்கும் அவை ஞாயிற்றுக்கிழமைகளின் நடுராத்திரிக்குள் வைத்தியசாலையைச் சென்றடைய வேண்டும் என்பதற்கும் **தீனாவும் டோனியும்** இணக்கம் தெரிவித்திருந்தனர்.

மே மாத முதலாவது வாரத்தில், **தீனாவின்** வாகனச் சாரதிகளில் ஒருவர் கோவிட் 19 நோய்த் தொற்றுக்கு உள்ளாகியிருந்ததன் காரணமாக, ஏனைய அனைத்து ஊழியர்களும் தாமாகவே சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். மேலும், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, அது நாடு முழுவதும் செயற்படுத்தப்பட்டதால், **தீனாவால்** 2020 யூன் மாதம் வரை **வரையறுக்கப்பட்ட ஹெல்தி லைவ் வைத்தியசாலைக்கு** மரக்கறிகளை வழங்க முடியவில்லை.

அதே சமயம், தூய்மைப்படுத்தல் திரவத்திற்கு நிலவும் அதிக கேள்வி காரணமாக அவற்றின் விலைகளில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பினால் ஒப்புக்கொள்ளப்பட்டவாறு தூய்மைப்படுத்தல் திரவத்தை வழங்க முடியாதுள்ளதாக **வரையறுக்கப்பட்ட ஹெல்தி லைவ் வைத்தியசாலையிடம் டோனி** தெரிவித்துள்ளார்.

மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளால், தமது வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளர்களின் எண்ணிக்கையை குறிப்பிடத்தக்களவு குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் வைத்தியசாலைக்கு ஏற்பட்டது. தற்போது, **தீனா** மற்றும் **டோனிக்கு** எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க வைத்தியசாலை திட்டமிட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கீழ்வருவனவற்றை **விபரிக்குக** :

(i) **தீனாவுக்கும் வரையறுக்கப்பட்ட ஹெல்தி லைவ் வைத்தியசாலைக்கும்** இடையில் வலிதான ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா (02 புள்ளிகள்)

(ii) **டோனிக்கும் வரையறுக்கப்பட்ட ஹெல்தி லைவ் வைத்தியசாலைக்கும்** இடையில் வலிதான ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா (02 புள்ளிகள்)

(b) **தீனா** மற்றும் **டோனி** தொடர்பில் **வரையறுக்கப்பட்ட ஹெல்தி லைவ் வைத்தியசாலைக்கு** இருக்கின்ற சட்ட உரிமைகளை **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(c) **தீனாவுக்கு** இருக்கின்ற சட்ட உரிமைகளையும் பரிகாரங்களையும் (remedies) **ஆராய்க.** (04 புள்ளிகள்)

(B) கார் விற்பனையாளரான **வரையறுக்கப்பட்ட றைட் கம்பனி** ஆனது **மோகன்** என்பவரிடமிருந்து ரூபா 2 மில்லியனுக்கு கார் ஒன்றை வாங்கியுள்ளது. வரையறுக்கப்பட்ட **றைட் கம்பனி** அந்தக் காருக்கு தீந்தை பூசி (பெயின்ட்) தனது காட்சியறையில் வைத்திருந்து, ரூபா 2.5 மில்லியன் ரூபாவுக்கு அதனை **கமல்** என்பவருக்கு விற்பனை செய்தது. நான்கு மாதங்களின் பின்னர், அந்தக் கார் களவாடப்பட்டிருந்த கார் எனக் கூறி, பொலிசாரால் கைப்பற்றப்பட்டதுடன் அது அதனது சொந்த உரிமையாளரிடம் மீள ஒப்படைக்கப்பட்டது. **வரையறுக்கப்பட்ட றைட் கம்பனி** அந்தக் கார் களவாடப்பட்ட கார் என்பதை அறிந்து கொண்டது. பொருள்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் கீழ், **வரையறுக்கப்பட்ட றைட் கம்பனி**, தன்னால் செலுத்தப்பட்ட முழுத் தொகையையும் தனக்கு மீளளிக்க வேண்டும் என **கமல்** கோரியுள்ளார் (claim). ஆயினும் **கமல்** நான்கு மாதங்கள் காரைப் பயன்படுத்தியதால் ரூபா 2.5 மில்லியன் என்ற முழுத் தொகையையும் மீளளிக்க **வரையறுக்கப்பட்ட றைட் கம்பனி** மறுத்துள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) தான் காருக்காகச் செலுத்திய முழுத் தொகையையும் **கமல்** கோர முடியுமா என்பதை **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(b) பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், ''பொருள்களுக்கு எதிராக'' பணம் செலுத்தப்படாத விற்பனையாளர் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய மூன்று (03) பரிகாரங்களைக் (remedies) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |